

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் மனைவி திருமதி கீதா ராதா அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (22.09.2025) சென்னையிலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது மகள் திருமதி ராதிகா சரத்குமார் உள்ளிட்ட குடும்பத்தி னருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மரு. நா. எழிலன் எம்.எல்.ஏ., வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, ராதாரவி, சரத்குமார், கராத்தே தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

## தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!

சென்னை, செப். 23

தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்கு மேற்கு பகுதி தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் நாளை (24.09.2025 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, சர்.பி.டி.தியாகராயர் கலை அரங்கில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் முன்னிலை நடைபெறுகிறது.

எனவே பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொருள்: 28.09.2025 மாலை 5 மணிக்கு, தியாகராயர் நகர் பகுதிக்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வருகை குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்

## மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா - காலை உணவு!

### கே. கருணாகரன் முன்னிலையில் எஸ். பாலாஜி, சி. மூர்த்தி எம். என்.அஜய் தென்னவன் பங்கேற்பு!

மாதவரம்,செப்.23-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 17 வது வட்டம் கொசப்பூர் இரண்டாம் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் கொசப்பூர் இரண்டாம் பகுதியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் மலர் தூவி மரியாதை செய்தனர்.

பின்னர் பொதுமக்களுக்கு காலை உணவு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள் வழங்கினார்கள். பின்னர் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டை தலைகுனியே விடமாட்டேன் என்கின்ற வகையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஓரணியில் தமிழ்நாடு மூலம் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டவர்கள் உறுதி மொழியை திரும்ப வாசித்து தங்களது எதிர்ப்பை ஒன்றிய அரசிற்கு தெரிவித்தார்கள்.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், 17 வது வட்ட துணைச் செயலாளர் சி. பாலாஜி, 17 வது வட்ட பிரதிநிதி சி. மூர்த்தி, வக்கீல் வி. பார்த்தசாரதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன்,பாக முகவர்கள் ஜி கார்த்திக், டி.திவாகர்,எம். மைக்கேல் என்கின்ற மோகன்ராஜ், வி. சுமீர், வி.விஷ்ணு, ராகேஷ், தீயம்பாக்கம் எம். ஜான்சன், ஜி. பூபாலன், இ.சுதர்சன், சந்தோஷ், காந்திநகர் சுந்தரம், வாசு, சுப்பிரமணி, தியாகி விஸ்வநாததாஸ் நகர் ஜி.சுரேஷ், வடபெரும்பாக்கம் பி. செந்தில், இ. கார்த்திக், எம். கோவிந்தன், எஸ். கமலநாதன், ஜி. முனிவேல் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### தாம்பரம் நகர முன்னாள்

## துணைச் செயலாளர் எஸ்.சுப்புலட்சுமி சர்தார் படத் திறப்பு!

### கழகத்தினர் பங்கேற்பு!



தாம்பரம், செப்.23-

தாம்பரம் நகர முன்னாள் 29-வது வட்ட செயலாளர் நினைவில் வாழும் பி.சர்தார் அவர்களின் மனைவியும் தாம்பரம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷின் தாயார் முன்னாள் தாம்பரம் நகர துணை செயலாளருமான எஸ். சுப்புலட்சுமி சர்தார் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவேந்தல் மற்றும் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (23.09.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணி அளவில் திருவள்ளுவர்புரம் பிரதான சாலை மேற்கு தாம்பரத்தில் நடைபெறுகின்றது.

இதில் மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

### ஒன்றிய அரசின் முகமூடியை தமிழ்நாட்டு மக்கள் அகற்றுவர்!

## தமிழ்நாட்டிற்குரிய நிதியைத் தர மும்மொழித் திட்டத்தை நிபந்தனையாக்குவதா?

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கடும் கண்டனம்!



சென்னை, செப். 23 -

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை என்பது - அறிஞர்அண்ணாமுதலமைச்சராக இருந்தபோது எடுக்கப்பட்ட கொள்கை முடிவு. இந்த நிலையில், தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் ஹிந்தி, சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொண்டால்தான், தமிழ்நாட்டுக்குக் கொடுக்கவேண்டிய நிதியை அளிப்போம் என்று ஒன்றிய பி.ஜே.பி. அரசு நிபந்தனை விதிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல! தமிழ்நாட்டு மக்கள் ஒருக்காலும் மும்மொழியை ஏற்கமாட்டார்கள்; ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை என்னும் முகத்திரையை அகற்றுவார்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

நேற்று (21.9.2025) அய்.அய்.டி.யில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பிரிவுகளில் ஒன்று நடத்திய நிகழ்வில் கலந்துகொண்ட ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர், "தமிழ்நாடு (தி.மு.க.) அரசு மும்மொழித் திட்டத்தை ஏற்றாலொழிய நாங்கள் (ஒன்றிய அரசு) கல்விக்கான நிதியைத் தர மாட்டோம். மும்மொழித் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்பதில் என்ன பிரச்சினை?" என்றெல்லாம் ஆணவத்துடன் பேசியுள்ளது வன்மையான கண்டனத்திற்குரியது!

#### புதிய கல்வித் திட்டம் என்ற 'மதயானை!'

"புதிய கல்வித் திட்டம் என்ற ஒன்றிய அரசின் 'மதயானை' மாணவர்களிடையே புகுந்து, பகுத்தறிவையும், தமிழ்நாட்டின் பாரம்பரிய பண்பாட்டினையும் பாழாக்க ஒருபோதும் இசையமாட்டோம்" என்று வெளிப்படையாகவே - அதற்குரிய காரண, காரிய விளக்கங்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் தெளிவாகத் தெரிவித்துவிட்ட பிறகும், மும்மொழித் திட்டத்தை, அவர்களின் வடமொழி, சமஸ்கிருத பண்பாடு என்ற 'ஆரியப் பண்பாட்டை, மொழித் திணிப்புமூலம் ஏற்படுத்தும் ஏற்பாடு என்பதை, பா.ஜ.க. பிறப்பதற்கு முன்பே, பல ஆண்டுகளாகக் கூறி, திட்டவட்டமான நிலைப்பாட்டினை எடுத்துள்ளது திராவிட இயக்கம்.

"மும்மொழித் திட்டத்தினை ஏற்பதில் என்ன பிரச்சினை?" என்று கேட்கிறார், மோடி அரசின் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான்.

அவருக்கு நமது பதில், "நீங்கள்தான் பிரச்சினை. ஆர்.எஸ்.எஸ். (RSS) தான் பிரச்சினை! உங்கள் பண்பாட்டுப் படையெடுப்புதான் பிரச்சினை! எங்கள் உரிமைதான் பிரச்சினை!"

நிதி தருவதற்கு மும்மொழித் திட்டம் என்ற நிபந்தனையா? அரசியலமைப்புச் சட்டத்தின்படி, உங்களது வலுக்கட்டாய வற்புறுத்தலை - நிதி தருவதற்கு நிபந்தனையாக வைப்பதா?

"கையெழுத்துப் போடு - இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்; இல்லையேல், நிதி இல்லை" என்று சொல்வதா? Coercion என்ற நிர்ப்பந்தக் கட்டாயம் - திணிப்பு அல்லவா இது?

#### அடிமையா, தமிழ்நாடு?

1967 இல் அறிஞர் அண்ணா தலைமையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைக்கப்பட்ட நிலையில், இரு மொழிக் கொள்கை என்பது தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவாகவே (Policy Decision) எடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமாகி (பிறகு ஆணையும் போடப்பட்டது) முன்மொழிந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு அரை நூற்றாண்டாகவே அமுலில் இருந்து வரும் ஒன்று!

தி.மு.க. ஆட்சி மாறி, அ.தி.மு.க. ஆட்சி வந்த நிலையிலும், இந்தக் கொள்கை முடிவைத் தொடர்ந்து வந்தது ஏன்? என்பதைப் புரிந்து கொள்ளவேண்டாமா?

#### மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி மாற்றப்பட்டது ஏன்?

நமது அரசியலமைப்புச் சட்டப்படி, 'கல்வி' என்பது ஒன்றிய அரசின் ஏகபோகத்திற்குரியது அல்ல; ஏழாவது அட்டவணையில், நெருக்கடி காலத்திற்கு முன்வரை (1975) மாநிலப் பட்டியலில்தான் இருந்து வந்த ஒன்றுதான்.

காரணம், கல்வித் திட்டம் என்பது அந்தந்த மாநில மக்களின் பண்பாடு, மொழி உரிமை, உணர்வுகள், பழம் பெரும் பாரம்பரிய வரலாறு இவற்றைப் பொறுத்தது. பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பயிற்றுவிக்கப்பட வேண்டிய ஒன்று என்று அரசியல் சட்டக் கர்த்தாக்கள் உணர்ந்து, மாநிலப் பட்டியலில் கல்வியை வைத்திருந்தனர்.

பிறகுதான், அது ஒத்திசைவுப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டது! Union List என்ற ஒன்றிய அரசின் ஏகாதிகாரத்திற்கு மாற்றப்படவில்லை என்பதை அறவே மறந்துவிட்டு, ஆர்.எஸ்.எஸ்., அதன் கொள்கை அஜெண்டாவான சமஸ்கிருதம் - ஹிந்தித் திணிப்பினை ஏற்படுத்த ஒரு வழிமுறையாகவே இந்த 'மும்மொழித் திட்ட'த்தைக் கொண்டு வருகின்றனர்.

#### சி.பி.எஸ்.இ. கல்வித் திட்டத்தில் 3பிற மாநிலங்களில் தமிழ் உண்டா?

கேந்திரிய வித்யாலயா என்ற ஒன்றிய அரசுப் பள்ளிகளில், தமிழ் படிக்க என்ன ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்?

எந்த மொழி வேண்டுமானாலும் மும்மொழித் திட்டத்தின்மூலம் படிக்கலாம் என்று பாசாங்குத்தனத்தின்மூலம் நமது பண்பாட்டை அழிக்கும் முகமூடித் திட்டம்தான் - இந்த மும்மொழித் திட்டம்.

நமது 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் முன்பே, திட்டவட்டமாகவே தெரிவித்துவிட்டார்!

'பத்தாயிரம் கோடி ரூபாய் நிதி தருகிறோம்' என்று பாசவலை போட்டாலும்கூட, தமிழ்நாடு அரசு ஒருபோதும் இதற்கு இணங்காது எனப் பிரகடனப்படுத்திவிட்ட பிறகும், இப்படி வறட்டுப் பேச்சு, வக்கணை தேவையா?

'தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்' என்று சூளுரைக்கும் முதலமைச்சர் ஆளும், அகிலம் வியக்கும் ஆட்சியில், இப்படி அரசியலமைப்புச் சட்ட விரோதப் பேச்சை ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் பேசலாமா?

#### மறைமுகமாக ஹிந்தி, சமஸ்கிருதம் திணிப்பு!

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் மறைமுக ஹிந்தி - சமஸ்கிருதத் திணிப்புக் கான இந்த முகமூடித் திட்டத்தை முறியடித்துக் காட்டுவோம்!

இம்மாதிரி பேச்சை மீண்டும், மீண்டும் தமிழ்நாட்டிற்கு வந்து பேசுங்கள் ஒன்றிய அமைச்சரே!

2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணி ராஜபாட்டையில் வெற்றிக் கனி பறிக்க, அதுவே உரமாகி, நல்ல விளைச்சலைக் கொடுக்கும்.

உங்களது முகமூடியை, அந்த வீச்சின்மூலம் மக்கள் அகற்றிக் காட்டுவர் எம் மக்கள்.

இதில், அண்ணா தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன?

இதிலும் அமித்ஷாவிடம் போய் ஆலோசனைகளைக் கேட்பதுதானா?

அல்லது அவர்களின் முந்தைய தலைவர்களின் நிலைப்பாடுதானா என்பதை அவர்கள் தெளிவுப்படுத்தட்டும்!

இவ்வாறு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தமது அறிகையில் தெரிவித்துள்ளார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பை கழிவுகளை எடுத்துச் செல்வதற்காக 15வது நிதி குழு மானியத்தில் தல 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து டிராக்டர்கள், 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மினி லாரி என மொத்தம் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட வாகனங்களை மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ கலந்து கொண்டு வாகனங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தாமஸ் மலை ஒன்றிய அதிகாரிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சென்னை தென் மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை 24.09.2025 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் சர்.பி.டி.தியாகராயர் கலையரங்கத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, இக்கூட்டத்தில், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுகுழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளைசார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பாகபார்வையாளர்கள், தவாறமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முதலமைச்சர் கழக தலைவர் அவர்களால் வடக்கு உஸ்மான் சாலை புதிய மேம்பாலம் திறப்பு விழா மற்றும் கழக ஆக்கப்பணிகள்

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.




மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17 வது வட்டம் கொசப்பூர் இரண்டாம் பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மலர் தூவி அஞ்சலி செலுத்தி, பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, கே. சண்முக பிரியன், எம். என்.அஜய் தென்னவன், எஸ். சிவக்குமார், பாக முகவர்கள் டி. திவாகர்,எம். மைக்கேல் என்கின்ற மோகன்ராஜ், வி.சுமீர், ஜி.கார்த்திக், வி.விஷ்ணு, எம். ஜான்சன், இ. சுதர்சன், ஜி. பூபாலன், ராகேஷ், வட பெரும்பாக்கம் பி. செந்தில், இ. கார்த்திக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

### தி.மு.க. மாணவர் அணி

## மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் திருப்பூர் வடக்கு மாவட்டம் - திருப்பூர் வடக்கு மாநகரம், திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

#### திருப்பூர் வடக்கு மாவட்டம்

##### திருப்பூர் வடக்கு மாநகரம்

அமைப்பாளர் - க. கிரித்தின் கவியரசு எஸ்.என்.வி.எஸ். 1வது கொங்கு நகர், மெயின் ரோடு, திருப்பூர் - 641607.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சந்துரு 8/258, காமராஜர் வீதி, அங்கேரிபாளையம், திருப்பூர். 2) வீ. கௌதம் சிவகுமார் எஸ்1, சி-பிளாக், சமுக்த்தா அப்பார்ட்மெண்ட், மும்மூர்த்தி நகர், பி.என். ரோடு, திருப்பூர் - 641602. 3) எல். நிசாருதீன் 29/3, 19/3, திருநீலகண்டபுரம் வடக்கு 3வது வீதி, திருப்பூர் - 641602. 4) எ. சூரியபிரகாஷ் 2/5ஏ, ஜீவா வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர். 5) ஆர். சுல்பிகர் அலி 2, பட்டாளம்மன் கோவில் வீதி, பள்ளக்காட்டுத் தோட்டம், வேலம்பாளையம், திருப்பூர். 6) ரா. கிளாடிஸ் அலெக்ஸ் 12/31, டீச்சர்ஸ் குடியிருப்பு, பிஸப் ஸ்கூல் பின்புறம், 4வது வீதி, குமார் நகர், திருப்பூர்.

#### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

##### திருநெல்வேலி மேற்கு மாநகரம்

அமைப்பாளர் - பி. வினோத்குமார் 1/பி, மாவடி குளத்தாங்கரை, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சரவணன் 18/16, பாலபாக்யா நகர், மதுரை ரோடு, திருநெல்வேலி மாவட்டம். 2) பி. ஜெயகுமார் 6, மேலக்கரை நியூ குடியிருப்பு, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம். 3) முகம்மது ஆஷிக் 87ஏ/1, எம்.ஜி.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். 4) மு. அம்பேத் பிரபாகரன் 13ஏ, கிருஷ்ணபேரி முஸ்லீம் தெரு, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம். 5) எஸ். சித்ரா 22, எண்ணாயிரம் பிள்ளை கோவில் மேலத் தெரு, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-09-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோபி ஜி. வெங்கிடு
### செப்டம்பர் 23 (2020)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

"பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். " என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**